[11th March 1966

[*Note.*—An asterisk (*) at the commencement of a speech indicates revision by the Member.]

II.—CALLING ATTENTION TO DEATHS DUE TO CHOLERA IN NORTH ARCOT DISTRICT.

புலவர் கா. கோவிந்தன் : கனம் சபாநாயகர் அவர்களே, சட்டசபை விதிகளின் 41-வது விதியின் கீழ் வட ஆற்காடு மாவட்டத்தில் செய்யாறு வட்டத்தில் குறிப்பாக அனக்காவூர் பஞ்சாயத்து யூனியன் பகுதியில் காலரா நோயினுல் இறப்புக்கள் ஏற்பட்டதும் அப்பகுதியில் இக்கொள்ளை நோய் மேலும் பரவிக்கொண்டிருப்பது மான அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த விஷயத்தை கனம் பொது சுகாதார அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு கொண்டு வருகிறேன்.

THE HON. SRIMATHI **JOTHI VENCATACHELLUM :** Mr. Speaker, Sir, the Government understand that no case of cholera has been reported from Cheyyar taluk during the entire period of 1965. During 1966, only sporadic cases of cholera were seported from Vembakkam Panchayat Union.

During the month of February, five cases of cholera were reported from Vembakkam Panchayat Union. Out of the five attacks two proved fatal. From the Anakkavur Panchayat Union no cases have been reported either during the entire period of 1965 or during 1966 up-to-date. The number of inoculations done during 1966 in the infected areas is 2,906. The Public Health authorities are taking adequate preventive measures to arrest the spread of the epidemic. The staff position in the district is adequate to cope up with the situation.

The incidence of cholera in Cheyyar taluk in North Arcot District is as follows—

Name of the taluk.		Week ending.	Attacks.	Deaths.
Cheyyar	..	12—2—1966	1	..
Cheyyar	..	19—2—1966	4	2

III.—STATEMENT BY CHIEF MINISTER REGARDING LANGUAGE OF 'COMMANDS' IN N.C.C. TRAINING.

கனம் திரு. எம். பக்தவத்சலம் : கனம் சபாநாயகர் அவர்களே, சட்டசபை, விதி 82-ன் கீழ் ஒரு விளக்கம் கூற விரும்புகிறேன் —விளக்கம் அல்ல திருத்தம் என்று கூட சொல்லலாம். நான் கல்வி மான்யத்தின் மீது விடையளிக்கும் போது, என்.ஸி.ஸி. க்கு கமான்ட் கொடுப்பதைப்பற்றி சில உறுப்பினர்கள் குறிப்பிட்டதற்கு பதில் சொன்னேன், அதாவது கமான்ட் தமிழில் இருக்கும் என்று சொன்னேன். அது தவறு என்பதை இப்போது தெரிவித்துக்கொள்கிறேன். கமான்ட் என்று சொல்வது, ரைட், லெப்ட் என்று சொல்வது, அதை தமிழில் சொல்ல வேண்டுமென்றால், வலது, இடது என்று சொல்லவேண்டும். லெப்ட், ரைட் என்று சொன்னுல் எல்லோரும் புரிந்துகொள்வார்கள். இந்தியில் இருந்தாலும் அதை புரிந்து கொள்ளமுடியும். வாயிலே இந்தி வார்த்தை நுழையாது என்று சொன்னுல் அது வேறு விஷயம். ஆனுல் இப்படிப்பட்ட கமான்ட் வார்த்தைகள் நாடு முழுமைக்கும்